விலை ரூபா 1-25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 தை 26 ஜ- அவ் 17 இதழ் 355
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 8 2 1985

எம்.ஜி.ஆர். 3வது தடவையாக நாளை மறுதினம் பதவியேற்பு

(சென்னை)

தமிழ் நாட்டின் முதலமைச்சராக திரு. எம். ஜி. ராமச்சந்திரன் மூன்றாவது தடவையாக நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பதவியேற்கவுள்ளார்.

திரு. எம் ஜி. ராமச்சந்திரன் தலைமையிலான அ. தி. மு. க.வின் புதிய அமைச்சரவையும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பதவியேற்கும்.

ஆளுநரை சந்தித்தார்

முதலமைச்சர் ராமச்சந்திரன் ராஜ்பவனில் நேற்றுத் தமிழ்நாடு ஆளுநர் திரு எஸ். எல். குரானுவை சந்தித்தார். திரு. ராமச்சந்திரன் 40 நிமிடங்கள் ராஜ்பவனில் இருந்தார்.

புதிய அ. தி. மு. க. அமைச்சர்களின் விபரங்களை திரு. ராமச்சந்திரன் நேற்றுக் கூறவில்லையென்று ஆளுநர் தெரிவித்தார்.

புதிய அமைச்சர்களின் பட்டியலை நாளை சனிக்கிழமை

[5-ம் பக்கம் 5ம்-கலம் பார்க்க]

இலங்கை இனப்பிரச்னையில் திடீர் திருப்பம்!

ஜனாதிபதி ஜே. ஆர்.-ராஜீவ் சந்திப்பு

சத்வால், லலித் டில்லி புறப்பாடு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னையைத் தீர்த்துவைக்கும் முயற்சியில் இந்தியாவும் இலங்கையும் மீண்டும் ஈடுபட்டுள்ளன.

"பேச்சுவார்த்தைக்கு இனிமேல் இடமில்லை" என்று இலங்கையில் பரவலாகப் பேசப்பட்டபோதிலும், திடீரென ஏற்பட்ட பெரும் திருப்பமொன்றைத் தொடர்ந்தே ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனை – பிரதமர் ராஜீவ் காந்தி சந்திப்புக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தனவின் விசேட தூதுவராக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி நாளை விஜயத்தை மேற்கொண்டு இன்று புதுடில்லி செல்லவுள்ளார்.

ஜனாதிபதியின் விசேட தூதுவராகச் செல்லும் அமைச்சர் லலித் அத்துலத்முதலி இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்னை சம்பந்தமாக இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை சந்தித்துப் பேசுவார்த்தை நடத்தவுள்ளார்.

இப்பேச்சுவார்த்தையின் போது தனிநாடு கோரும் பிரிவினைவாதிகளை முறியடிக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றியும், இனப்பிரச்னையை ஒரு தீர்வுக்குக் கொண்டுவர இலங்கைஅரசாங்கம் நடைமுறைப்படுத்தவுள்ள திட்டங்கள் பற்றியும் இந்தியப் பிரதமருக்கு விரிவாக தெளிவுபடுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சத்வால் புதுடில்லி பயணம்

அதேவேளை இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் பொருட்டு இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திரு. எஸ். ஜே. எஸ். சத்வால் கொழும்பிலிருந்து நேற்று விமானமூலம் புதுடில்லி பயணமானார்.

திரு. அத்துலத்முதலி புது

(6ம் பக்கம் 1-ம் கலம் பார்க்க)

பல்கலைக்கழக மாணவர்கள் திடீர் பகிஷ்கரிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழகத்தின் இரண்டாம் வருட விஞ்ஞான பீட மாணவர்கள் நேற்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் ஏழு மாணவர்களையும் ஒரு உத்தியோகத்தரையும் விடுதலை செய்வது குறித்து பல்கலைக்கழக நிர்வாகம் சரியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்ற கோரிக்கையை முன்வைத்தே இந்த மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இவர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை ஊர்வலமாக எடுத்துச்சென்று உபவேந்தர் சு. வித்தியானந்தனிடம் கையளித்தனர்.

பதில் நீதவான் கடத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

பதில் நீதவான் ஒருவர் நேற்றிரவு அவரது இல்லத்திலிருந்து கடத்தப்பட்டுள்ளார்.

நேற்றிரவு சுமார் பத்து மணியளவில் ஒரு வானில் வந்த இனந்தெரியாத சிலர் இவரைக் கடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

'பூஸா'விலிருந்து 52 இளைஞர் நேற்று திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

காலி 'பூஸா' முகாமில் இருந்து நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த 48 இளைஞர்களில் பதின்மூன்று பேர் நேற்று மாலை அவர்களது உறவினர்களால் அன்புடன் அழைத்துச் செல்லப்பட்டனர்.

முப்பத்து ஐந்து இளைஞர்கள் நேற்றிரவு கோண்டாவிலில் உள்ள வடபிராந்திய போக்குவரத்துச்சபை டிப்போவில் அனுமதிக்கப்பட்டு இன்று காலை சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

மேற்படி இளைஞர்கள் அனைவரும், யாழ். உதவி அரசாங்க அதிபரும், பொதுசனத்தொடர்பு அதிகாரியுமான திரு. எஸ் சண்முகசுந்தரத்தினால் நேற்றுப்பகல் பதினொன்றரை மணியளவில் அநுராதபுரத்திலிருந்து பஸ்ஸில் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு தமிழ் மாணவர்களை

(6-ம் பக்கம் 3-ம் கலம் பார்க்க)

கலைப்பீடப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் ஒத்திவைக்கப்பட்ட கலைப்பீடப் பரீட்சைகள் யாவும் இம்மாதம் 22-ம் திகதி ஆரம்பமாகும் என்று யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தெரிவித்தார்.

"எமது கோரிக்கையை கைவிடமாட்டோம்" சென்னையில் 'சிவா'

சென்னை, பெப். 7

"தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் ஈழக் கோரிக்கையைக் கைவிட்டப்போவதில்லை. தமிழ் ஈழத்தைப்பெற எமது கடமை தொடர்ந்து அஞ்சாது போராடும்."

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு சிவசிதம்பரம் சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்

மல்லாகம் நீதிமன்றம் மீண்டும்சேதப்படுத்தப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதிமன்றம் இனந்தெரியாத நபர்களினால் நேற்று முன்தினமிரவு சேதப்படுத்தப் பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டடக் கண்ணாடிகள் யாவும் உடைக்கப்பட்டதுடன், தளபாடங்களும் வீழ்த்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

புத்தகங்கள், மற்றும் தஸ்தாவேஜுகள் யாவும் வீசப்பட்டு தொலைபேசியும் துண்டிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பதிவேடுகளுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டது (க)

தப்பிஓட முயன்றனராம்: மூவர் சுட்டுக்கொலை

(கிளிநொச்சி)

வவனியா இராணுவ முகாம் பாதுகாப்பிலிருந்து தப்பியோட முயன்ற மூவர் சுட்டுக் கொல்லப்பட்டது சம்பந்தமாக தமக்கு இராணுவம் அறிவித்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு.என் ஜெயநாதன் கிளிநொச்சி பிரஜைகள் குழுவினருக்கு அறிவித்துள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் விபரம் வருமாறு:- சுப்பையா இராமசாமி (30 வாய்க்கால் - கிளிநொச்சி), இங்கிப்பிள்ளை கட்டக்குட்டி - பாலகிட்டினர் (கணேசபுரம்) சுப்பிரமணியம் செல்வநாதன் (கிரீன்லேன் கூல் பார் கிளிநொச்சி).

இம்மூவரும் வவனியா இராணுவ முகாமில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ரா)

மட்டுநகர்—கொழும்பு ரயில்சேவை ரத்து

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு - கொழும்பு ரயில் சேவை நேற்றிலிருந்து மறு அறிவித்தல்வரை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே தலைமைக் காரியாலயத்திலிருந்து அறிவித்தல் வந்

(5-ம் பக்கம் 5-ம் கலம் பார்க்க)

மாணவர் பகிஷ்கரிப்பு: கைதானவர் விடுதலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவரொருவரை ஆயுதப்படையினர் கைது செய்ததைத் தொடர்ந்து இக்கல்லூரிமாணவர்கள்நேற்று வகுப்பகளைப் பகிஷ்கரித்தார்கள்

இதனையடுத்துக் கல்லூரி அதிபர், பாதுகாப்புப்படை இணைப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டதையடுத்து, இம்மாணவர் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மரண விசாரணை நடந்தது

(யாழ்ப்பாணம்)

காரில் கர்ப்பிணிப்பெண்ணை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்த போது யாழ் பஸ் நிலை

[5ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

அரவளம்பரம்

தேவை

நல்ல நிலையில் அல்லது புதிய விற்பனைக்குள்ள "டீ" பிறிஜ் (Deep Freezer) தேவையாகவுள்ளது.தொடர்பு சீமாட்டி, 122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 1706

யாழ். நகரில் உள்ள வியாபார ஸ்தாபனம் ஒன்றிற்கு 40 வயதிற்கு மேற்பட்ட நல் ஒழுக்கம் உள்ள மின்பொறி, பைப் உபகரணங்கள் விற்பனையாளராகவும், ஆங்கில தட்டெழுத்து தெரிந்தவராகவும், மேலதிக வியாபார அனுபவம் உள்ளவராகவும், யாழ். நகரிலிருந்து 5 மைல்கள் சுற்றாடல்களுக்குள் வசிப்பவராகவும் முன்னேலை அனுபவத்துடன் எழுத்துமூலம் 18-02-85க்கு முன் விண்ணப்பிக்கவும். அகதியாக வந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விளம்பர இல:- 1702 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 1702

ஓட்டுனர் பொருத்துனர் (Fitters) வேலைக்கு தெல்லிப்பழையைச் சார்ந்த ஆட்கள் தேவை. அனுபவம் உடையவர்கள் 9-2-85 சனிக்கிழமை சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவும். டைனமிக் என்ஜினியரிங் லிமிட்டெட், கே. கே. எஸ். வீதி, தெல்லிப்பழை. 1726

குத்தகைக்கு

கச்சாய் ரோட்டில் சாவகச்சேரி சந்தையில் இருந்து 150 யார் தூரத்தில் சகல வசதிகளுடனும், தளபாடங்களுடனும் சேர்ந்த கடை குத்தகைக்கு கொடுக்கப்படும்.விபரங்கட்கு; அரியராசா, 3, கயிலாசபிள்ளை வீதி,சாவகச்சேரி,/182/2,நாவலர் வீதி, பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். 1708

WANIED

Jaffna Hindu Vellala parent seeks for Handsome son. 33, medium height, employed in France, a pretty bride preferably residing abroad. Details horoscope, needed. 1729, C/o Eelanadu, Jaffna. 1729

விற்பனைக்கு

103, வடகரை வீதி, திருமலையில் கடை மேல் மாடியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. தியாகராசா. அரியாப்பத்தானை, பொலிகண்டி. 1724

பரந்தன், பூங்காவனம் சந்தியில், கெனடி ரோட் முகப்பில் 5 ஏக்கர் நெற்காணி இருபோகமும் செய்யக்கூடியது விற்பனைக்குண்டு. தொடர்பு: நாகுமாரசாமி, பூங்காவனம்சந்தி, பரந்தன் அல்லது 120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் போன்; 23871. 1721

L300 டெலிக்கா டிலிவரி VAN 1982 Model Brand New ஆக இறக்குமதி செய்யப்பட்டது. 27,000 கிலோ மீற்றர் மாத்திரம் ஓடியது. திரு. N. ஸ்ரீராம், அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை அல்லது திரு. S செல்வேந்திரா, சாம்பமூர்த்தி அன் கம்பனி,(லேடன் கம்பனிக்கு அருகாமையில்) 42 K. K. S. ரோட், யாழ்ப்பாணம். 1719

நல்ல நிலையிலுள்ள 12இஞ்சி கிரைண்டர் 2, நம்: 7 கலர் ஒன்று, ஒரு சோமசிறி-3மோட்டர், சில உதிரிப்பாகங்களுடன் விற்பனைசகுண்டு. விபரங்களுக்கு: செல்வி மில், கைதடிச் சந்தியில் தொடர்பு கொள்ளவும். 1718

சேவை

கலர் பிலிம் சுருள்களைச் சிறந்த முறையில் குறுகியகாலத்தில் Processing And Printing செய்துகொள்ள நாடுங்கள் கொழும்பு ஸ்ருடியோ. யாழ்ப்பாணம். 1511

காணவில்லை

6-2-85 அன்று கஸ்தூரியார் வீதி,ரதிமணிக்கூட்டு கடைக்கு முன் நிற்பாட்டியிருந்த எனது சைக்கிளும், ஓலை பாக்கும்உறுதிசளுடன் காணவில்லை. கைப்பற்றியவர் தயது செய்து தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும் 35, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். 1720

2 வருடத்துக்குப்பின் எதிரிக்குப் பிணை!

(புலோலி)

உடுப்பிட்டியைச் சேர்ந்த நீலகண்டன் ஆசிரியர் வீட்டில் துப்பாக்கி முனையில் நடந்த பெரும் கொள்ளையில் கடந்த இருவருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரண்டாம் எதிரியான கம்பர் மலையைச் சேர்ந்த சிதம்பரன் தங்கராசாவை பிணையில் விடுமாறு யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்துக்குப் பணித்துள்ளார். எதிரியின் சார்பில் சட்டத்தரணி கனக. மனோகரன் ஆஜராகினார்

நீர்கொழும்புச் சிறையில் வைக்கப்பட்டுள்ள எதிரி பிணையில் வந்ததும், ஒவ்வொரு வெள்ளியும் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

வலி - கிழக்கு தெ. ப. ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி

அறிவித்தல்

வலி - கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 7000 வரையிலான வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனையாக இருக்கின்றன. மீளளிப்புவைப்புப் பணமாக ரூபா 250/உம், கேள்விப் பத்திரம் ஒன்று ரூபா 1/-உம், செலுத்தி சங்க வேலை நாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 15-02-85ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்

நீர்வேலி,
1985-02-01. 1715

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

கேள்விப் பத்திர அறிவித்தல்

1985-ம் ஆண்டிற்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தால் நடாத்தப்பட்டு வரும் மகப்பேற்று நிலையங்களின் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் 13-02-85ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 12-02-85ம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 3-00 மணிவரையும் ரூபா 50/- வைப்புப் பணமாகவும், ரூபா 5/- கேள்விப் பத்திரக் கட்டணமாகவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

இதன்கீழ் கையொப்பம் வைத்திருப்பவரிடமிருந்து அல்லது சுகாதார வைத்திய அதிகாரியிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் பற்றிய ஏனைய விபரங்களையும் நிபந்தனைகளையும் தேவையானோர் பெற்றுக் கொள்ளலாம்.

க. தர்மலிங்கம்,
பதில் மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

சுகாதாரப் பகுதி,
மாநகராட்சி மன்ற
அலுவலம்,
யாழ்ப்பாணம்.
29-01-85 1717

பெர்லின் டிக்கட்

குறைந்த விலையில்

பெர்லின் டிக்கட்

தாராளமாகக் கிடைக்கும்.

உடனடி விமானச்சேவையும்
ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

ஒரு வழி ரூபா 13,000 மட்டுமே.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,

31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23166

திருமண அழைப்பு

காலம்:
11-2-1985 திங்கட்கிழமை
காலை 6-45 மணி முதல் 7-45 மணி வரை

இடம்:
வண்ணார்பண்ணை சிவன்கோவில்

மணமகன்:
திருநிறை செல்வன்
மு. ஸ்ரீதயகுமார்
(உரிமையாளர், விஜயபாலா யுவலஸ், செங்கலடி)

மணமகள்:
திருநிறை செல்வி
இ. சத்தியபாமா

உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு, திருமதி முத்துச்சாமி குடும்பத்தினர், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

திருமதி இராசையா, (காலஞ்சென்ற திரு சு. இராசையா, சட்டத்தரணி, கொட்டடி), 154, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(1694)

வெளிநாடு பிரயாணம்

அமெரிக்கா, கனடா செல்வதற்கான சகல ஒழுங்குகளும்,
பிரான்ஸ், ஜெர்மனி செல்வதற்கான சிறந்த வசதிகளும்,
குறைந்த செலவில் காலதாமதமின்றி செய்துகொடுக்கப்படும்.

PRASAD REST,
11-Upatissa Road,
BAMBALAPITIYA.
PHONE: 587855

வ. நல்லையா,
அலவத்தை,
அளவெட்டி.
[1596]

31-வது நாள் நினைவஞ்சலி

மலர்வு:
30-9-1914

உதிர்வு:
12-1-1985

கோண்டாவில் வடக்கு

அமரர் சின்னத்தம்பி வீரசிங்கம்

(இளைப்பாறிய P.W. D. ஓவசியர், மலேசியா)

எங்களை எல்லாம் ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மசாந்திக்காக கண்ணீர் அஞ்சலி செலுத்திப் பிரார்த்திக்கிறோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்
11-02-85ல் கோண்டாவில் வடக்கு இல்லத்தில் அந்தியேட்டிகிரியை நடைபெறும். யாவரையும் அன்புடன் கலந்துகொள்ளுமாறு அழைக்கிறோம். (1727)

1 ஸ்பெயின் பிரான்ஸ் செல்வதற்கான சகல பிரயாண ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

2 குறைந்தசெலவில் கூடிய விரைவில் BERLIN செல்வதற்கான ஒழுங்குகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.

AIR-TRANSIT

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/5சB கபூர் பில்டிங்
2-வது மாடி, கொழும்பு-1
போன்: 549365

538 (290) ஆஸ்பத்திரி வீதி,
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

மணிவாக்கு

பலவீனமும் கொடூரமும் ஒன்று சேர்ந்த இடத்திலே பொய் பிறக்கின்றது.

—இங்கர்சால்

நமது நோக்கு

நோயுற்ற நாடு

37வது சுதந்திர தினத்தை ஒட்டி நாட்டின் தலைவர்கள் விடுத்திருக்கும் செய்தி பத்திரிகைகளுக்கு, பகிரங்க கூட்டங்களுக்கு, கொண்டாட்டத்தின விறுவிறுப்புக்கு ஏற்ற மாதிரி அமைகின்றது. இது ஒரு பண்டைக்கால மரபு.

இன்று இடம்பெறும் கொண்டாட்டங்கள் எவையானாலும் எங்கு நிகழ்ந்தாலும் நோய்வாய்ப்பட்ட நாட்டின் நிகழ்ச்சிகளே.

பிரதமர் பிரேமதாசா இதனை வற்புறுத்தியிருக்கின்றார். ஜனாதிபதி ஜெயவர்த்தனா முன்னொரு முறை நாட்டின் நோயின் குணத்தைக் குறிப்பிடும்போது சிகிச்சை மிகக்கடினமென்பதையும் சொல்லியிருக்கிறார்.

அரசாங்கம் கண்டுபிடித்த நோய் 'பயங்கரவாதம்'. "நோயாளி டாக்டரைக் கொன்றுவிட்டு ஓடிஒளித்து விடுகிறான்; எனவே நோயை மாற்றுவது எங்ஙனம்?" என்று தமக்குரித்தான பாணியில் சிக்கல் நிறைந்த கருதுக்களை மிகச்சாதாரணமானவைபோல் விளக்கியிருக்கிறார். டாக்டர்களை நோயாளி தாக்கிவிட்டு சுகமடைகிறான் என்பதை ஜனாதிபதி குறிப்பிடவில்லை.

இதன் காரணமாகவோ என்னவோ நாட்டின் மருத்துவநிபுணர், நிபுணரல்லாத டாக்டர்களும்கூட மிகவேகமாக நாட்டை விட்டு வேற்று நாடுகளுக்கு வெளியேறுகின்றனர்

சுகாதார அமைச்சர் இது பற்றி ஆச்சரியம் தெரிவிப்பது ஆச்சரியமே.

வேற்றுநாடுகளில் தொழில் புரிய விரும்பும் டாக்டர்கள் அதற்கு அனுமதிக்கப்படுவது அரசின் கொள்கை. இங்கு கற்று வெளியேறும் டாக்டர்களுக்குத் தொழில் வசதி அளிப்பது ஒரு காரணமாயிருந்தது.

சுகாதார அமைச்சு ஒன்றை நினைக்க டாக்டர்கள் வேறொன்றை நினைத்துவிட்டனர். மனநோய் முற்றி தனது பிரஜைகள் அனைவரையும் ஈன இரக்கமின்றித் தாக்கும் நிலையில் நாடு இருப்பதால், வெளியேற வசதிஉடையவர்கள் அப்படி செய்வது அந்தநோய் அவர்களுக்குத் தொற்றவில்லை என்பது தெளிவு.

இதனைத் தடுப்பது இன்று இலங்கையைப பற்றி உலகில் வெளிவரும் பிரசார ஆற்றுக்குஅணைகட்டித்தடுப்பது போல மிகச் சிரமமானது.

வைத்தியம் கிட்டாத நோயாளிகள் நிறைந்தநாடு, சுதந்திர நாடு என்று பறைசாற்றுவது ஒருபரிகாசமல்லவா?

"அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம்"

வங்காலையில் பலியான வண. பிதா மேரி பஸ்தியான் எத்தகைய மனிதரென்பதை வாசகர் அறிவதற்கு எமது பத்திரிகை உதவியது.

"ஏழைகள் பாவிகள் இரட்சகராக எங்கும் நிறைந்த இயேசுவின் புகழை ஆழ்தமிழாலே" சொல்லித் துன்பம் துடைத்து வந்தவர் அருள் திரு. பஸ்தியான்.

இருந்த இடம் தெரியாமல் இவரை மறைக்கும் சக்தி இறைவனைவிட யாருக்குண்டு, இவ்வுலகில் இதனை ஆராய ஒரு மேல் மட்டக் குழு வேண்டுமென்று கேட்கப்பட்டது.

இவருக்கு முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலையில் பிறந்து வளர்ந்து தொழில் புரிந்து "காணுமற் போனவரே" கார்ச் சாரதி இராமசாமி. ராணுவ ஆட்சியில் செத்தாரை துஞ்சினரென்ற மங்களப் பேசுக்கு இடமில்லை. காணுமற் போனவர் என்று சொல்வது வழக்கம். இவர்களுள் சிலர் ஈமக்கிரியைகள் முடிந்தபின்னரும் திரும்பி வருவதும் உண்டு.

ஆனால் கார்ச்சாரதி என். இராமசாமி கொலைசெய்யப்பட்டு அவருடைய சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் இன்னும் வைக்கப்பட்டிருப்பதால் அவர் உயிர்ப்பது அசாத்தியம்.

கடமைக்கு - கார் ஓட்டுவதற்கு தமது நீண்டகால வாழ்வை அர்ப்பணித்த பெருமகன் என். இராமசாமிஎம்இராமசாமியென்று அழைக்க வேண்டும். எங்கள் பத்திரிகை ஸ்தாபனத்துடன் தமது நேர்மையான பணியால் நெருங்கிப் பழகிய ஒரு முதியவர். இந்தியாவைப் பிறந்த நாடாகக் கொண்ட இவர் யாழ்ப்பாணத்தில் புகுந்து உண்மையான உழைப்பில் உறுதி கொண்டவர்.

எதிர்காலத்தில் அரும் பெரும் சேவையில் சிறக்க இருந்த அருள் திரு பஸ்தியானும், நெடுங்கால உண்மை உழைப்பில் வயோதிபம் அடைந்த இராமசாமியும் இங்கு இன்றைய கொடுமை நிறைந்த சூழ்நிலையில் கொல்லப்படும் பலரின் சிறந்தபிரதிநிதிகள் ராணுவ ஆட்சியில் இவர்களுக்கு இடமில்லாமற்போய்விட்டது.

குற்றம் எதுவாயிருந்தாலும் யார் குற்றவாளியானாலும், காத்திராப்பிரகாரமான நிகழ்ச்சியென்று கவலை தெரிவிக்கதாலும் இத்தகைய மனிதர், இங்கு தேவைப்படும் மனிதர்வேறு இடத்துக்கு எவ்வித முன்னறிவித்தலின்றி ஆடமாற்றம் செய்யப்படுவது அறம் அல்ல என்பதை உணர்க.

இன்று கும்பாபிஷேகம்

(மட்டுவில்)

நுணவில் வீரவேலி அருள்மிகு ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய புதிய விக்கிரக பிரதிஷ்டாகும்பாபிஷேகம் இன்று பிரதமகுரு சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். தொடர்ந்து 12 தினம் அபிசேகமும், வழாக்களும் நடைபெறும்.

சிங்கள குடியேற்றங்களை எதிர்த்து

தமிழர்கள் போராட்டத்தை தீவிரப்படுத்துவதே வழி!

சென்னையில் 'அமிர்'

[சென்னை]

தமிழ்மக்கள் வாழும் பகுதிகளில் ஆயுதபாணிகளான சிங்களமக்களை குடியமர்த்தும் முயற்சிகளை இலங்கை அரசு தொடர்ந்தும் நடத்துமேயானால் தமிழர்கள் தங்கள் போராட்டத்தை தீவிரப்படுத்துவதைத்தவிர வேறுவழியில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நிருபர்களிடம் இதனைத் தெரிவித்த திரு. அமிர்தலிங்கம், தமிழர்களை அச்சுறுத்தி அவர்களின் எல்லைப் பகுதியிலிருந்து விரட்டி அடிக்க அரசு முயன்று வருவதாகக் கூறினார்.

தமிழர்களை விரட்டிஅடித்து விட்டு ஆயுதபலம் கொண்ட சிங்களவர்களை குடியமர்த்தும் முறையை அரசு பின்பற்றி வருவதாகவும் இதுவரையில் 50 ஆயிரம் தமிழர்கள் வெளியேற்றப்பட்டு விட்டதாகவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

மக்கள் வீடுகளுக்கு திரும்பமுடியாத நிலை

பொலிகண்டி சம்பவத்தில் 35 லட்சம் ரூபா நஷ்டம்!

பேராசிரியர் சிவத்தம்பி தகவல்

[யாழ்ப்பாணம்]

பொலிகண்டியில் சிலதினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது சுமார் 35 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தெரிவித்தார்.

இந்த சம்பவத்தினால் பீதியடைந்து அந்தப்பகுதிகளிருந்து வெளியேறிய சுமார் 2,000 மக்கள் தமது இருப்பிடங்களுக்கு திரும்முடியாத நிலையிலிருப்பதாகவும் பேராசிரியர் கூறினர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதிஉதவி பெறுவதற்காக யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பி. பாலசிங்கம், பகுதி உதவி அரசாங்க அதிபர் திரு வை. வேலும் மயிலும் ஆகியோருடன் தொடர்பு கொண்டிருப்பதாக தெரிவித்த பேராசிரியர் சிவத்தம்பி; அந்தப்பகுதிகளில் பஸ்கள் ஓடாததாலும் பாலங்கள் தகர்ப்பினால் விபரங்களை அறிவதில் கஷ்டமிருப்பதாகவும் கூறினர்.

62 வீடுகள், 5 கடைகள், 2000 புத்தகங்களைக்கொண்ட நூல் நிலையம் ஒன்று, மோலர் ஒன்று, 10 ஐஸ்வாடிகள், ஏராளமான வலைகள் என்பன தீயிடப்பட்டதாக தெரிவித்த பேராசிரியர் சிவத்தம்பி, இங்கு இடம்பெற்ற சம்பவத்தில் ஒரு ராணுவ வீரரே காயமடைந்ததாக கூறுகின்றனர். இதற்காக இவ்வளவு அனர்த்தங்களா என்றுகவலை தெரிவித்தார்.

வெள்ளிச்சிந்தனை

சமய சாதனை

ஜனநாயக தத்துவம் எவ்வளவு சிறப்புடையதாயிருந்தாலும் அதனைப்பின்பற்றுபவர் பிறர் நலனை அலட்சியம் செய்து தமது சொந்தச் சிறப்புக்கு வேண்டியன செய்பவராயிருந்தால் அவரால் ஜனநாயகத்துவமே இகழ்ச்சிக்கு உரியதாய் விடும்.

ஜனநாயகக் கொள்கையைப் போல உயர்ந்த தத்துவங்களையும், சுலபமாக அருள் செய்யும் கருணையே உருவமான சிவபெருமானைக் கடவுளாகவும் பெற்றிருப்பது மட்டுமன்றி சிவனருளைப் பெறவாய்ப்பான சமய ஒழுக்கங்கள் சாதனைகளையும் பெற்றிருப்பவர்கள் இந்நாட்டில் வாழும் சைவமக்கள் எனலாம். ஆனால் இவர்கள் தமது சமயத்தின் சிறப்பினைப் பற்றிப் படித்தலிலும் பேசுதலிலும் காலங்கழிக்கின்றனரேயன்றிச் சமய ஒழுக்கங்களிலும் சாதனைகளிலும் ஈடுபடுவதில்லை என்று சொல்ல வேண்டியிருக்கின்றது.

பிறர்நலனையும் உரிமையையும் பறித்துத் தான் உயரப் பாடுபடும் ஜனநாயகவாதி போலப் பல சைவமக்கள் தமது சமயக் கொள்கைகளுக்கு மாறுக வாழ்கின்றார்கள். சைவ அபிமானத்துடன் செயற்படுவதுபோல் காரியப்படும் இவர்கள் பல சந்தர்ப்பங்களில் சைவசமயத்துக்கே இழுக்கு ஏற்படத்தக்கதாக நடந்து கொள்கின்றனர்.

விபூதி உருத்திராக்கம் அணிதல், பஞ்சாட்சரசெபம் செய்தல், கோயில் வழிபாடு செய்தல், சிவபுராணங்களைக் கேட்டும் படித்தும் சிந்தித்தல், திருஞானசம்பந்தர் முதலிய சமய குரவர்களுக்கு பூசை செய்தல், சமயப் பெரியோர்களை மதித்து கௌரவித்தல் போன்ற ஒழுக்கங்களை மேற்கொள்வதோடு துன்பம் ஏற்படும் போதும், விசேட நன்மைகளைவிரும்பும் போதும், புண்ணிய காலங்களிலும் விசேட வழிபாடு செபம் புராணபடனம் என்பன செய்தல் மூலம் சமயசாதனைகளை மேற்கொள்ளும் போதே ஒருவன் உண்மையான சைவசமயியாக இருப்பான்.

ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்துரையேன் புத்தேளிர்
கோமான் நின்திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே

— மாணிக்கவாசகர்

— அருளாளன்

மின்சார சபை வாகனம் மீண்டும் கடத்தப்பட்டது!

(ஊரெழு)

இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான ஜீப் வாகனமொன்று புதன்கிழமை இரவு கடத்திச் செல்லப்பட்டுள்ளது. சுன்னாகத்திலுள்ள யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அலுவலகத்தில் இந்த வாகனம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தபோது அவ்விடத்திற்கு வந்த இளைஞர்கள் சிலர் காவலாளியை துப்பாக்கி முனையில் பயமுறுத்தி அதனை எடுத்துச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அலுவலகத்தின் களஞ்சிய அறையில் வைக்கப்பட்டிருந்த மின்சாரப்பொருட்களும் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கொள்ளையடித்துச் சென்றிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றின் பெறுமதி சுமார் 10,000 ரூபா என்று சொல்லப்படுகிறது.

கடந்த இருவாரங்களுக்கு முன்னர் சுன்னாகத்திலுள்ள யாழ் பிரதேச மின்பொறியியலாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற கொள்ளையின்போது கடத்திச் செல்லப்பட்ட லான்ட் ரோவர் வாகனம் கடந்த திங்கட்கிழமை மாலை அதே அலுவலகத்திற்கு அண்மையில் கைவிடப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளதாகவும் இந்த வாகனம் இப்பொழுது பயன்படுத்தப்பட முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுபவாணி

மாலை
5-00 செய்திகள்
5-05 சிறுவர் நிகழ்ச்சி [தமிழ்]
5-30 ஆங்கில நிகழ்ச்சி
6-30 செய்திகள் [தமிழ்]
6-55 இசை நிகழ்ச்சி
8 00 செய்திகள் [சிங்களம்]
8-25 கலைகள் சம்பந்தமான நிகழ்ச்சி
9-00 செய்திகள் [ஆங்கிலம்]
9-20 உலக கிரிக்கெட் தொடர் நிகழ்ச்சி
11-20 ஒளிபரப்பு முடிவு.

கூட்டம்

(சுண்டுக்குளி)

கொழும்புத்துறை கிழக்கு ஆத்திப்புலம் சிறிசந்திர சேகரப் பிள்ளையார் ஆலய பகபாலன சபையின் முக்கிய பொதுக்கூட்டம் நாளை திரு. ஆ. செல்வரத்தினம் தலைமையில் நடக்கவுள்ளது.

சுயமாக சிந்திக்கும் ஆற்றலுடன்

எம். ஜி. ஆர்!

அமெரிக்க டாக்டர் அரசுக்கு சிபார்சு

(சென்னை)

தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி ராமச்சந்திரன் சுயமாக சிந்திக்கும் ஆற்றலுடன் இருக்கிறார் என்று அமெரிக்க டாக்டர் பிராட்மன் தமிழக அரசிடம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலிருந்து திரு. ராமச்சந்திரன் புறப்படும் போது திருப்திகரமான உடல் நிலையில் இருந்ததாகவும் அவர் தமிழக அரசுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சருக்கு சிகிச்சை அளித்த வைத்தியர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக திரைப்படக் கலைஞர்கள் நேற்று முன்தினம் சென்னையில் நடத்திய வைபவத்தில் பேசிய நிதி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், டாக்டர் பிரட்மனின் கடிதம் பற்றி குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் உரையாற்றிய நடிகர் சிவாஜி கணேசன், முதல்வருக்கு சிகிச்சையளித்த டாக்டர்களின் உருவத்தில் கடவுளைக் காண்பதாக கூறினார்.

மீனவ குடும்பங்களுக்கு உணவு முத்திரை

[கொழும்புத்துறை]

வேலணை உதவி அரச அதிபர் பகுதியில் புதிய பாதுகாப்புச் சட்டத்தினுல் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு விரைவில் விசேடஉணவு முத்திரைகள் விநியோகிக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை அவ்வப்பகுதிக் கிராம சேவை அலுவலர்கள் துரிதமாக மேற்கொண்டுவருகின்றனர். இதன் மூலம் சுமார் மூவாயிரம் மீனவக் குடும்பங்கள் நிவாரணம் பெறவுள்ளன.

இலங்கையின் கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்தது!

[லண்டன்]

தமிழ்த்தீவிரவாதிகளை சமாளிப்பதற்கென ஆயுதங்களை வழங்குமாறு இலங்கை அரசு விடுத்த வேண்டுகோளை அமெரிக்கா மறுத்துவிட்டதாக அகில இந்திய வானெலியின் செய்திப் பிரிவு நேற்று அறிவித்தது.

பிரிட்டிஷ் பத்திரிகைகளை மேற்கோள்காட்டி இந்த செய்தியை வெளியிட்ட அந்த வானெலி, மனித உரிமைகளை மீறிய செயல் என்பதாலேயே அமெரிக்கா இந்த உதவியை வழங்க மறுத்ததாக தெரிவித்தது.

பிரிட்டன், சீனு ஆகிய நாடுகளிடமிருந்து போர்க்கப்பல்களை யும் ஆயுதங்களையும் இலங்கை வாங்க விருப்பதாகவும் அந்த செய்தி கூறியது.

அல்வாய் வித்தியாசாலை விரைவில் மகாவித்தியாலயம்

(புலோலி)

அல்வாய்வடக்குஸ்ரீ அம்பாள் வித்தியாசாலை விரைவில் மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்படவுள்ளது.

இவ்வித்தியாலயத்தின் கட்டிடப் பற்றுக்குறையை நீக்குமுகமாக புதிய கட்டிடங்களை அமைக்கவும் பழைய மிஷன் பாடசாலையில் உள்ள பழைய கட்டிடத்தை நீக்கி புனரமைத்துக் கட்டுவதற்குமென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 1,60,000 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இக்கட்டிடங்களை வெகுவிரைவாக அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வித்தியாசாலையை மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்த வேண்டுமென அல்வாய் அபிவிருத்திச் சங்கம், கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கவை ஏற்கனவே கேட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

நிதி சேகரிப்பு

(சுன்னகம்)

முல்லைத்தீவு அகதிகளுக்கு உதவுவதற்காக யாழ். கொக்குவில் பல் தொழில் நுட்ப நிறுவன மாணவர்கள் நிதிசேகரித்துவருகின்றனர். கடந்த ஒருவார காலமாக இந்நிதி சேகரிப்பு இடம்பெறுகிறது.

வணிகத்துறை மாணவர்கள் மட்டும் இதுவரை 12,500 ரூபாவை சேகரித்து வழங்கியுள்ளனர். (கி)

இணக்க சபை

(கரவெட்டி)

கரவெட்டி கன்பொல்லைக் கிராமத்தில் ஏற்படும் குடியியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காணக்கூடிய இக்கிராம மக்களின் பிரஜைகள் இணக்க சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது

வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் கூடி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் இச்சபையின் தலைவராக நாடகக் கலைஞரும் சமூக சேவையாளருமான திரு. கே. வி. நற்குணம் அங்கம் வகிக்கிறார். 9 பேர் இக்குழுவில் உள்ளனர்.

எம். ஜி. ஆர். நலம் வேண்டி அன்னதானம்

(கரவெட்டி)

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். ஈழத்தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து நற்பணி ஆற்றவேண்டும் என வேண்டி வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரம முருகன் கோவிலில் வரும் 17-ம் திகதி அன்னதான வைபவமொன்றை கரவெட்டி ஸ்போர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தவிருக்கிறது. இதற்கான ஒழுங்குகளை சங்கத் தலைவர் திரு. கே இரத்தினசிங்கம் மேற்கொண்டுள்ளார்.

24 மணி நேரம் நடனமாடி உலக சாதனை

(ஹைதராபாத்)

இந்திய நடனக் கலைஞரான சாளராகுமாரி 24 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக நடனமாடி நேற்றுமுன்தினம் உலக சாதனை ஒன்றை ஏற்படுத்தினர்.

இதற்கு முன்னர் நடனக் கலைஞர் கோபி கிருஷ்ணுவே 10 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக நடனமாடி ஒரு சாதனை ஒன்றை ஏற்படுத்தியிருந்தார்.

செல்வி சாளராகுமாரி தமது 24 மணி நேர சாதனையின்போது 'குச் சுப்பிடி' நடனத்தையே ஆடினர். ஹைதராபாத் நகரிலேயே இந்த சாதனை நடன நிகழ்ச்சி இடம்பெற்றது.

இந்திய உபஜனதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சாளராகுமாரியைப் பாராட்டினர். (கி)

கிராம சேவகரை நியமிக்க கோரிக்கை

[ஊர்காவற்றுறை]

அனலைதீவு, எழுவைதீவு பகுதிகளுக்கு நீண்டகாலமாக கிராமசேவகர் எவரும் நியமிக்கப்படாததால் இப்பகுதி மக்கள் படும் கஷ்டங்களை ஊர்காவற்றுறை பிரஜைகள் குழு யாழ். அரசாங்க அதிபருக்கு சுட்டிக்காட்டியுள்ளது.

பிரஜைகள்குழு பொதுச் செயலாளர் திரு. எஸ். பி. ஐயர் அரசாங்க அதிபருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இப்பகுதிகளுக்கு கிராம சேவகர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார்.

யாழ்நகர் மதுபான விற்பனை நிலையத்தில் கொள்ளை

[சுன்னகம்]

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல மதுபான விற்பனை நிலையமொன்றில் நேற்று முன்தினம் 10,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

சம்பவதினம் காலை 11 மணியளவில் கைத்துப்பாக்கிகளுடன் வந்த இனந்தெரியாத இருவர் மனேஜரை பயமுறுத்தி 10,000ரூபா பணத்தையும் கல்குலேட்டர் ஒன்றையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதன்பின் சம்பவம் நடைபெற்றஇடத்திற்கு வந்த இளைஞர் குழுவொன்று கொள்ளையில் ஈடுபட்டவர்களை நகரம் முழுவதும் தேடிப்பார்த்தனர் ஆனலும் கொள்ளையர்கள் அகப்படவில்லையாம்.

எழுதுமட்டுவாள் குளத்தில் மிதந்த இளைஞர் சடலம்!

[மட்டுவில்]

எழுதுமட்டுவாள் குளம் ஒன்றில் வாலிபர் ஒருவரின் சடலம் மிதந்தது. சடலம் விசாரணைக்காக சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

கைதடி வடக்கைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை தியாகராசா என்ற [20 வயது] வாலிபரே இறந்தவர்.

தந்தையற்ற நான்கு சகோதரிகளுக்கு ஒரே ஒரு ஆண் சகோதரனை இவரின் உழைப்பிலேயே குடும்பம் வாழ்ந்து வந்தது. இன்று அந்த ஏழைப் பெண்கள் பரிதாபகரமாக கதறி அழுகிறார்கள்.

எழுதுமட்டுவாளிலுள்ள தனியார் ஸ்தாபத்தில் இந்த இளைஞர் வேலைசெய்து வந்தார். மரணவிசாரணை நடக்கிறது.

பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலய அதிபர் திருமதி குணேஸ்வரி பரராஜசிங்கம் ஆசிரிய சேவையில் விசேட தரம் முதலாம் பிரிவுக்கும், இலங்கை கல்விச்சேவை ஐந்தாம் பிரிவுக்கும் ஏககாலத்தில் கல்விச்சேவை ஆணைக்குழுவினுல் பதவியுயர்த்தப்பட்டுள்ளார். 1980-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ம் திகதி இவர் இப்பாடசாலையின் அதிபர் பதவியை ஏற்றார். இவருடைய தலைமையின் கீழ் இப்பாடசாலை சகல துறைகளிலும் மிகத் துரிதமாக முன்னேற்றமடைந்து வந்துள்ளது. ஒரு முதலாந்தர விஞ்ஞானப் பட்டதாரியான திருமதி. பரராஜசிங்கம் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வி முதுமானிப் பட்டமும், டில்லிப் பல்கலைக்கழகத் தத்துவ முதுமானிப் பட்டமும் பெற்றுள்ளார். வடபிராந்தியக் கல்லூரி அதிபர்களில் மிகவுயர்தராதரம் பெற்றவர்களுள் இவரும் ஒருவரா வர்.

பூஞ்சணக் காளான் நோய்களைப் பூரணமாகக் கட்டுப்படுத்த...

'டைத்தேன் எம் 45'



250 றோம்: ரூ. 40/-
500 றோம்: ரூ. 75/-

பல பாவனைக் காளான் நாசினி 'டைத்தேன் எம் 45'

உருளைக் கிழங்கு, மிளகாய், வெங்காயம், புகையிலை, நிலக் கடலை, தக்காளி, கரட், அவரை, கரை, கோவா, பூக்கோவா, திராட்சை முதலிய எந்தப் பயிரைப் பாதிக்கும் எவ்வித பூஞ்சணக் காளான் நோய்களையும் அது அறவே கட்டுப்படுத்தும்.

வெளிறல், வெதும்பல், அழுகல், வாடல், புள்ளி விழல், கொப்புள நோய் போன்ற எல்லா வற்றையும் ஒழிக்கும் 'டைத்தேன் எம் 45' பாவித்து, அதிக விளைச்சலும் இலாபமும் பெறுங்கள்.

பயிர் வளம் பெருக்கப் பாவியுங்கள் 'டைத்தேன் எம் 45'

உற்பத்தியாளர்:
CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட் த.பெ. எண் 352, கொழும்பு 1.
TAL

இருதினங்களில் பத்துக்கு மேற்பட்ட வாகனங்கள் கடத்தல்!

[வண்ணார்பண்ணை]

கடந்த இரு தினங்களுக்குள் சாவகச்சேரிப் பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட மோட்டார் வாகனங்கள் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இவற்றில் பனை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான மோட்டார் கார் ஒன்றும் அடங்குகிறது.

இச்சபையின் தலைவரினால் பாவிக்கப்பட்டுவந்த இக்கார் சாவகச்சேரியிலுள்ள அவரது வீட்டில் பாதுகாப்பாக விடப்பட்டிருந்த பதே இனந்தெரியாத இளைஞர் கோஷ்டியொன்று இக்காரைக் கடத்திச் சென்றுள்ளதாகவும் மேற்படி சபையின் தலைவரின் மனைவி இதை எடுக்கவேண்டாம் என்று கேட்டபோதும் அக் கோஷ்டியினர் எடுத்துச் சென்றதாகவும், திருப்பி இக்காரை ஒப்படைப்பதாக அவர்கள் தெரிவித்துச் சென்றதாகவும் தெரியவந்துள்ளது.

இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், இச் சபையின் இயக்குனர்களுக்கும் தலைவர் தெரிவித்துள்ளதுடன் பொலிசில் புகாரும் செய்துள்ளார். (கி)

வீடியோ காட்சிக்கு களியாட்டவரி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வீடியோ படக்காட்சிகளைக் காண்பிப்போர்களிடமிருந்து களியாட்டவரி வசூலிக்க யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை முடிவு செய்துள்ளது.

யாழ். மாவட்ட அபிவிருத்திசபை, தனது அதிகாரங்கட்குட்பட்ட உப அலுவலகங்களின் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இது தொடர்பாக பணித்துள்ளது.

சாவகச்சேரியில் மா தட்டுப்பாடு

(மட்டுவில்)

சாவகச்சேரியில் ஏற்பட்டுள்ள மா தட்டுப்பாட்டினால் பேக்கரிகளுக்கு மாவிநியோகத்தில் தடங்கல் ஏற்பட்டுள்ளது இதனால் பொது மக்களின் பாண் தேவையை பூர்த்தி செய்ய முடியாத நிலையிலுள்ளதாக பேக்கரி உரிமையாளர் கவலை தெரிவிக்கிறார்கள். சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்தில் 'மாவு' போதிய இருப்பு இல்லாமையே மாவு தட்டுப்பாட்டிற்குக் காரணமாம்.

துப்பாக்கி முனையில் கொள்ளை

[மட்டுவில்]

சாவகச்சேரி குடி தண்ணீர் விநியோகத் திட்டத்தின் மீசாலை கிளைக் களஞ்சியத்தில் இனந்தெரியாத இளைஞர்களால் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

அங்கு காவலில் இருந்த காவலாளியை துப்பாக்கி முனையில் மிரட்டியே இப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன சிமெந்துபைகள் உடபட நீர் விநியோக தண்ணீர் தொட்டி அமைக்கவைத்துள்ள பொருட்களே கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களாகும் இது தொடர்பாக யாழ் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

நீகல் மினி
தினசரி 10-15, 1-15
The Iron Monkey
ஜேர்மன் மொழியிலான விறுவிறுப்பான கராட்டி சண்டைப்படம்

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
இன்று முதல்
ஜெய்சங்கர், K. R. விஜயா நடித்த
முகூர்த்த நாள்
வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-15.
கமல் - மாதவி
டிக் டிக் டிக்
(கலர்)

வெளிநாடு செல்வதற்கு

✶ விமான டிக்கட்:
விசேட கட்டணத்தில் லண்டன், பரீஸ், சிங்கப்பூர், மலேசியா
SPECIAL FARE TO LONDON, PARIS, SINGAPORE AND MALAYSIA
Attractive fares to European Countries U. S. A. Canada and Australia.

✶ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை
வார நாட்களில் காலை 8.30 முதல் 4 30 வரையும், சனிக்கிழமைகளில் காலை 9-00 முதல் நன்பகல் 12-00 வரையும் பெற்றுக் கொள்ளலாம்.
BUY YOUR AMERICAN EXPRESS TRAVELLERS CHEQUES ANYTIME BETWEEN 8-30 AND 4-30 ON WEEK DAYS AND ON SATURDAYS BETWEEN 9-00 A.M. — 12-00 NOON

✶ விமான ஆசனப் பதிவுகள்
மற்றும் உங்கள் சகலபிரயாண தேவைகளுக்கும்
இன்றே நாடுங்கள்
மக்கினோன் டிரவல்ஸ் லிமிட்.
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92 போன்: 24154

தர்மப் பணம்பெறுவதில் ஏற்பட்டுள்ள கஷ்டம்!

(மானிப்பாய்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல உப தபால் நிலையங்களில் இப்போது நிதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள காரணத்தாலும் உரிய நேரத்துக்கு இந்த உபதபால் நிலையங்களுக்கு பணம் வந்து சேராத காரணத்தாலும் இங்கு தர்மப்பணம் பெறுவதற்காகச் செல்லும் பல ஏழைகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்ப வேண்டிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்த தர்மப்பணத்தையே நம்பி வாழும் ஏழைகள் இதனால் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த தபால் நிலையங்களில் காசுக்கட்டளைகள் மாற்றிக் கொள்வதிலும் பொதுமக்கள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகிறார்கள். இங்கு நிலவும் நிதிப் பற்றாக்குறையே இவற்றுக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

கூட்டம்

[யாழ்ப்பாணம்]

தமிழ் தொழிற் சங்கக் கூட்டணியின் ஆலோசனைக் கூட்டமொன்று இம்மாதம் 16-ம்திகதி நடைபெறவுள்ளது

தமிழர் ஆசிரியர்சங்கப் பணிமனையில் இக்கூட்டம் இடம் பெறும். இக்கூட்டத்தில் இன்றைய சூழ்நிலைபற்றி ஆராயப்படும்என்று கூறப்பட்டது. (கி)

எதிரிகள் விடுதலை

(புலோலி)

அமைதிக்குப் பங்கம் விளைவித்தார்களென்ற குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்த எதிரிகள் எட்டுப் பேரையும் பருத்தித்துறை நீதவான் கே. கணபதிப்பிள்ளை விடுதலை செய்தார்

இந்த எதிரிகள் சம்பந்தமான குற்றச்சாட்டு வழக்கைப் பொலிசார் பலமாதங்களாகியும் மன்றில் தாக்கல்செய்யத் தவறிவிட்டதாலும், எதிரிகளில் 4பேர் வெளிநாடுசென்றுவிட்டார்களெனவும் மிகுதி இருவர் ஆசிரியர்கள் எனவும் ஒருவர் உதவி தபால் அதிபரெனவும் மற்றொருவர் முகாமையாளரெனவும், முறைப்பாட்டுக்காரரும் வெளிநாடு சென்றுவிட்டதாகவும் எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வ. மகாலிங்கம் தெரிவித்து இவ்வழக்கின் எதிரிகளை விடுதலைசெய்யுமாறு நீதவானிடம் சமர்ப்பணம் செய்தார்.

இதனைத் தொடர்ந்து நீதவான் எதிரிகளுக்கு மீண்டும் அறிவித்தல் வந்தால் மன்றில் ஆஜராகவேண்டுமென உத்தரவிட்டு எதிரிகளை விடுதலை செய்தார்.

வற்றாத நீரூற்று திருத்தப்படுகிறது

(ஊரெழு)

ஊரெழுகிராமத்தில் அமைந்திருக்கும் வற்றாத நீரூற்று எனப்படும் யாமா நீரூற்று தற்பொழுது பழுதடைந்த நிலையில் இருப்பதால் அதனைத் திருத்தி பாவனைக்கு உட்படுத்தும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக ஊரெழு கலைவாணி சன சமூக நிலையத்தினர் மேற்படி நீரூற்றை சிரமதானம் மூலம் துப்பரவுசெய்யும் பணியை கடந்த செவ்வாய்ழ்கிழமை மேற்கொண்டனர் பல பொது மக்களும் இதில் கலந்துகொண்டனர்.

பல வருடங்களுக்கு முன்னர் இந்த நீரூற்றிலிருந்து நீர்ப்பாசன வசதிசெய்யப்பட்டதால் இந்தப் பகுதியைச் சேர்ந்த பல விவசாயிகள் நன்மை பெற்றுவந்தது குறிப்பிடத்தக்கது.

இன்று விசேட அபிஷேகம்

(ஊரெழு)

ஊரெழு அருள்மிகு மீனாட்சி அம்மன் தேவஸ்தானத்தில் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்ட தினத்தைக் குறிக்கும் வகையில் இன்று வெள்ளிக்கிழமை மாலை விசேட அபிஷேகமும், பூசையும், பஜனை நிகழ்ச்சியும் இடம்பெறவிருக்கின்றன.

பிரிவுபசாரம்

(புலோலி)

யாழ். அபிவிருத்திச் சபை உடுப்பிட்டி உப அலுவலக பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு பீ கனகசபாபதி அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தராகப் பதவி உயர்வு பெற்று யாழ். அபிவிருத்திச்சபை புலோலி உப அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதையொட்டி திரு கனகசபாபதிக்கு யாழ் அபிவிருத்திச்சபை உடுப்பிட்டி உப அலுவலக ஊழியர்கள் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. பேராசிரியர் தலைமையில் பிரிவுபசார விழாவொன்றை நடாந்தினர்.

கவிதைப் போட்டி

(சுண்டிக்குளி)

யாழினி இலக்கிய வட்டம் கவிதைப் போட்டி ஒன்றினை நடாத்தத் தீர்மானித்துள்ளது. மிகச் சிறந்த கவிதைக்குத் தனியாக ரொக்கப்பரிசும் மற்றும் தகுதியான கவிதைகளுக்கு பரிசும் வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்படும் கவிதைகள் யாவும் தனியானதொரு நூல் வடிவில் பிரசுரிக்கப்படும் இந்தக் கவிதைத் தொகுதி அமரர் வித்துவான் சி. ஆறுமுகத்தை நினைவு கூரும் சிறு முயற்சியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது கவிதைகள் யாவும்ஏப்ரல்1-ம்திகதிக்குமுன் அனுப்பவேண்டும். ஒருவர் எத்தனை கவிதைகளும் அனுப்பலாம். கவிதை ஆக்குவதில் எந்த வித கட்டுப்பாடும் கிடையாது. சகல விடயங்களிலும் நிர்வாக சபையின் தீர்ப்பே இறுதியானது கவிதைகள் தாளின் ஒருபுறத்தில் மட்டுமே எழுதப்படல்வேண்டும்.

சுதுமலை பிரஜைகள்குழு

(மானிப்பாய்)

சுதுமலைப் பகுதியினரின் நலன்களைக் கவனிப்பதற்காக சென்ற 3-ம் திகதி றியல்ஸ் மண்டபத்தில் திரு சி மார்க்கண்டு தலைமையில் கூடிய பிரஜைகள் குழுக்கூட்டத்தின் போது பின்வருவோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் திரு கி மார்க்கண்டு ஜே பி உபதலைவர்கள் திருவாளர்கள்: க. தம்பிராஜா ஜே பி., சு. கனகசுந்தரம்.

இணைச் செயலாளர்கள்: திருவாளர்கள்: அ தெய்வேந்திரம், மு. ஜெகநாதன், பொருளாளர் திரு அ நற்குணசேகரன்.

மற்றும் கலாநிதி சோ கிருஷ்ணராசா, திருவாளர்கள்: மு. இராமநாதன், சோ. சிவசுப்பிரமணியம், சி ஜோ. தியாகராசா, எஸ் இராசரட்ணம், சி சிவகுரு, வ தம்பிராசா, பி. இராசரட்ணம், க புஷ்பராசா ஆகியோரைக் கொண்ட உறுப்பினர்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

மார்ச் 4-ம் திகதி மீண்டும் கப்பல் சேவை?

(கொழும்பு)

ராமேஸ்வரம் - தலைமன்னார் கப்பல் சேவை மார்ச் மாதம் 4-ம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை போக்குவரத்து அமைச்சு செய்து வருகின்றது. கப்பல் சேவை ஆரம்பமாகும் காலத்தில் அதற்கு ஏற்றிற்போல் தலைமன்னார் கொழும்பு ரயில் சேவையை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிகின்றது.

அகதிகளுக்கு உதவி

(யாழ்ப்பாணம்]

கொக்குவில் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் முல்லைத்தீவு அகதிகளுக்கென உணவுப் பொருட்கள் சிலவற்றை நேற்று அனுப்பிவைத்தது.

கருணைக்கிழங்கு, வெங்காயம். பச்சைமிளகாய் ஆகியனவே இப்பொருட்களாகும். மொத்தம் 110 கிலோ எடைகொண்ட இப்பொருட்கள் பஸ்வண்டிமூலமாக நேற்று அனுப்பப்பட்டன. மேலும் உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களை சேகரிப்பதில் இக்கிராம அபிவிருத்திச்சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஏற்கனவே பலபொருட்கள் அனுப்பப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது. (கி)

எம். ஜி. ஆர்.—

[1ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி]

இவர் சமர்ப்பிக்கக்கூடுமென்றும் ஆளுநர் கூறினார். திரு. ராமச்சந்திரனின் உடல்நிலை வியக்கத்தக்கமுறையில் தேறியுள்ளதாகவும் அவர் கூறினார்.

சில வார்த்தை கூறினால் போதும்

திரு ராமச்சந்திரன் முதலமைச்சராகப் பதவிப்பிரமாணம்செய்யும்போது, சில வார்த்தைகள் மட்டும் கூறினால் போதுமென்று ஆளுநர் தெரிவித்தார்

திரு ராமச்சந்திரன் உரிய முறையில் பதவியற்கவுள்ளதாகக் கூறப்பட்டது

பொன்னாடை போர்த்திக் கௌரவம்

காந்தி காமராஜ் தேசிய கங்கிரஸ் தலைவர் திரு குமரி அனந்தன் திரு ராமச்சந்திரனைச் சந்தித்து, பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

இந்திய உபஜனாதிபதி திரு. ஆர் வெங்கட்ராமனையும் ராஜ்பவனில் திரு. எம் ஜி. ராமச்சந்திரன் சந்தித்தார். (வெ)

மட்டுநகர்—

[1-ம்பக்க 3ம்கலத்தொடர்ச்சி)

துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டே ரயில் சேவை திடீரென நேற்று ரத்துச்செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

மரணவிசாரணை...

[1ம்பக்க 4ம்கலத் தொடர்ச்சி]

யத்தில் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியான என் இராமசாமியின் மரண விசாரணை அவசரகால சட்டவிதியின் கீழ் நேற்று நடைபெற்றது.

யாழ் நீதவான் எஸ். நாகராசா பிரேதபரிசோதனை நடத்துமாறு சட்ட வைத்திய அதிகாரிக்குப் பணித்து அறிக்கையை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார்.

இவரது சடலம் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

"அரசின் குடியேற்றத் திட்டம் ஒரு சர்வாதிகாரப் போக்கு!"

சமசமாஜ, கம்யூ., ஸ்ரீ. ல. மக்கள்கட்சி கண்டனம்!

[கொழும்பு]

"தென்னிலங்கையிலுள்ள 250 சிங்களக் குடும்பங்களைத் தெரிவுசெய்து, அவர்களுக்கு ஆயுதம் வழங்கி, வடக்கே குடியமர்த்தும் அரசின் திட்டம் ஜனநாயக முறைகளைக் கைவிட்டு, விடுசர்வாதிகாரப் போக்கில் செல்லும்முயற்சியாகவுள்ளது."

இவ்வாறு நாட்டின் இன்றைய நிலை குறித்து லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி, சிறிலங்கா மக்கள் கட்சி ஆகியவற்றினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பெரும்பகுதி இன்று யுத்தகளமாக மாறியுள்ளது. இராணுவ பலத்தில் மட்டும் அரசு அக்கறை செலுத்தியுள்ளது.

"இலங்கையின் இனப் பிரச்னைக்கு அரசியல்தீர்வு காணக்கூடிய எதுவித அக்கறையும் அரசிடம் இல்லை.

"இனப்பிரச்னைக்குத் தீர்வுகான உடனடியான நடவடிக்கை எதையும் அரசு மேற்கொள்ளவில்லை.

"நாட்டில் இடம்பெற்றுவரும் கண்மூடித்தனமான கொலைகள், கொள்ளைகள், சொத்துக்கள் அழித்தல் ஆகியவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும்.

"அரசாங்கமும் ஆயுதம்தாங்கிய இளைஞர்களும் ஆயுதப் போராட்டத்தை உடனடியாக நிறுத்தவேண்டும்".

இலங்கையின்...

(1-ம்பக்க 3ம்கலத்தொடர்ச்சி)

டில்லியில் நான்கு தினங்கள் தங்கியிருப்பார். இவர் இந்திய அரசின் சிரேஷ்ட அதிகாரிகளையும் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை புதுடில்லி வருமாறு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி அண்மையில் தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்திருந்தது தெரிந்ததே.

வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது

(கல்வியங்காடு)

யாழ். மாநகரசபை மராமத்துப்பகுதி வீதித்தொழிலாளர்கள் நேற்று மேற்கொண்ட அடையாள வேலைநிறுத்தம் கைவிடப்பட்டுள்ளது.

இவர்களது கோரிக்கை தொடர்பாகஉரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மராமத்துப் பகுதி பிரதம பொறியியலாளர் அளித்த உறுதிமொழியைத் தொடர்ந்தே தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியுள்ளனர்.

கைதான பெண்கள் விடுதலை

(கிளிநொச்சி)

சில தினங்களுக்கு முன்னர் பலாலியில் கைதான ஐந்து இளம் பெண்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பிரஜைகள் குழுவினரின் முயற்சியினாலேயே இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. [ரா]

27 தொகுதியில் தி.மு.க. போட்டி

சென்னை, பெப். 7

பாண்டிச்சேரி யூனியன் பிரதேச சட்டசபைத் தேர்தலில் தி. மு. க. 27 தொகுதிகளில் போட்டியிடவுள்ளது

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி 4 தொகுதிகளில் போட்டியிடவுள்ளது.

கொள்ளைப் பணம் திருப்பி ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக உபதபால் அலுவலகத்தில் அண்மையில்இடம்பெற்ற கொள்ளையின்போது கொள்ளையடிக்கப்பட்ட பணம் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளதாம்.

இக் கொள்ளையை மேற்கொண்ட இனம்தெரியாத நபர்கள் மேற்படி பணத்தை உபதபால் அதிபர் வீட்டில் கொண்டுசென்று கையளித்ததாகக் கூறப்படுகிறது.

பூஸாவிலிருந்து...

[1-ம்பக்க 4ம்கலத்தொடர்ச்சி]

நேற்றுமுன்தினம் பஸ்ஸில் கொண்டுசென்ற திரு. எஸ். சண்முகசுந்தரம் பேராதனையிலிருந்து அதேபஸ்ஸில் அநுராதபுரம் வந்து, 'யாழ்தேவி'யில் வந்த நாற்பத்துஎட்டு இளைஞர்களை ஏற்றிக்கொண்டு நேற்று மாலை ஆறு மணியளவில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்

நேற்றிரவு திரு. சண்முகசுந்தரத்துடன் 'ஈழநாடு' தொடர்பு கொண்டபோது, 52 இளைஞர்களில் நான்குபேர் கொழும்பில் இறங்கிவிட்டதாகவும் மிகுதி 48 இளைஞர்களை அநுராதபுரம் பஸ்ஸில் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவந்ததாகவும் வழியில் எந்தவிதபிரச்னையும் ஏற்படவில்லை என்றும் திருப்தி தெரிவித்தார்.

இவர்களில் பதின்மூன்று இளைஞர்கள் நேற்றிரவே வீடு திரும்பினர். மிகுதி 35இளைஞர்களும், யாழ். கோண்டாவில் பஸ் டிப்போவில் நேற்று இரவு தங்கியிருந்தனர்.

இப்படியும் நடக்கிறது

அவள் ஓர் இளம் பெண்.

கணவன் பிரான்ஸில் காலமானதும் சின்னவயதிலேயே விதவையாகிவிட்ட இப் பெண், மூத்த மகனை எப்படியும் நல்லதோர் கல்லூரியில் சேர்த்து, தந்தையின் பெயரை மைந்தன் பெற்றுவிடவேண்டுமென்று கனவு கண்டாள். ஒரு நாள்——

'அந்த'க் கல்லூரிக்குச் சென்றாள். அதிபரைச் சந்தித்து தனது நிலைமையைச் சுருக்கமாகச் செப்பினாள்.

எப்படியும் தனது மகனுக்கு 'அந்த'க் கல்லூரியில் முதல் வகுப்பில் இடம் கிடைத்துவிடவேண்டும் என்பது அவள் ஆசை.

அதிபர் 'நடை'முறையைக் கூறினார்.

"வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. இருந்தாலும் முழு முயற்சி எடுக்கின்றேன்..." என்று கூறிச் சென்ற அந்தப் பெண், அடுத்தநாள் ரொக்கத்துடன் அதிபர் முன் நின்றாள்.

"வசதிக்குறைவு என்று சொன்னீர்களே... பின்னர் எப்படி இது கிடைத்தது..."— அதிபர் கேட்டார்.

முதலில் சற்று மௌனம் சாதித்த அந்தப்பெண்; தனது கழுத்தில் கையை வைத்து..... "மூன்று பவுண் சங்கிலியை அடகு வைத்து....." என்றாள்.

கிளைமெக்ஸ் (அதாவது இறுதிக் கட்டம்):

ஒரு கார் புறப்படுகிறது. காரில் அதிபரும் அந்தப்பெண்ணும் செல்கின்றனர். அந்தக்கார் ஒரு நகைக்கடைமுன்பாக நிற்கிறது இருவரும் இறங்குகின்றனர். ரொக்கம் கடைக்குச் செல்கிறது. சங்கிலி, பெண்ணின் கைக்குத் திரும்புகிறது. இருவரும் மீண்டும் கல்லூரி திரும்புகின்றனர்.

"இப்படி நொந்து நீங்கள் 'அதை'த் தரத் தேவையில்லை.....உங்கள் மகனுக்கு கல்லூரியில் அட்மிஷன் கொடுக்கின்றோம். நீங்கள் சந்தோஷமாகப் போகலாம்..." அதிபர் கூறுகின்றார்.

மகனை அனுமதித்த பெருமையில் ஆனந்தக் கண்ணீருடன் கல்லூரியை விட்டுப்புறப்படுகிறார் அந்தப் பெண். இலட்சியப் பெண்ணின் நிலை கண்டு அதிபரும் ஆனந்தக் கண்ணீர் விடுகிறார்.

சுண்டி எடுத்தாலும், அதிபர்களில் இப்படி எத்தனை பேர்?

— ஊடுருவி

சுற்றுலா விடுதி தரைமட்டம்!

(கிளிநொச்சி)

முழங்காவிலில்அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்டக் காணி அலுவலகச் சுற்றுலா விடுதி நேற்று முன்தினம் இனம்தெரியாத நபர்களால் குண்டு வைத்து தகர்ச்சப்பட்டுள்ளது.

மேற்படி கட்டிடம்முற்றுச் சேதமடைந்துவிட்டது.

முல்லைத்தீவில் 80 மீனவர் கைது!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடல் பகுதியில் நேற்று 80 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் சென்ற வள்ளங்களும் பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளன.

தடை செய்யப்பட்ட கடல் பகுதியில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படுமென்ற அரசாங்கத்தின் அறிவிப்பை, அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தவறுதலாகப் புரிந்துகொண்டு மீன் பிடிக்கச்சென்ற மீனவர்களே கைதுசெய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் தொடர்பான விசாரணை நடைபெற்று வருகிறது.

மரண அறிவித்தல்

டாக்டர் சதாசிவம் சிவஞானசுந்தரம்

திசோகம பிங்கிரியாவில் வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய ச. சிவஞானசுந்தரம் அவர்கள் காலமானார். இவர் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் தயாபரன் (சவுதி) ஜெயாகரன், நிரஞ்சினி, நிர்மலா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். உடையார் ஒழுங்கை, பழம்ரோட், கந்தர்மடம் அன்னரின் இல்லத்தில் இருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு 9-2-85 சனிக்கிழமை காலை 9-00 மணியளவில் பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும்.

ஆ. இளையதம்பி [இளைப்பாறிய தலைமை ஆசிரியர்]
மாமனார் கந்தர் மடம்.

1736

மரணஅறிவித்தல்

திரு. யோகாநந்தன் இராஜதுரை

திரு. யோகாநந்தன் இராஜதுரை (Partner Rose Brand Factory) அகாலமரணமானார். இவர் திரு திருமதி T. இராஜதுரை (Rose Brand Factory Manipay) தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி கீதாரவீந்திரன், செல்வன் R. சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு. K. இரவீந்திரனின் அன்பு மைத்துனரும், உரும்பராயைச் சேர்ந்த திருமதி செல்வத்துரை (மம்மி) காலம்சென்ற திரு. செல்வத்துரை, காலம்சென்ற திரு. திருமதி T. முகாந்திரம் தியாகராஜா தம்பதிகளின் அன்புப் பேரனும் ஆவார் இவரின் ஈமக்கிரியைகள் 08-02-85 வெள்ளிக்கிழமை காலை பத்து மணியளவில் மானிப்பாயிலுள்ள இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

1738

மரண அறிவித்தல்

Dr. N. R. ராஜேந்திரா

சுன்னாகம் மிருகவைத்தியர் டாக்டர் என். ஆர். ராஜேந்திரா காலமாகிவிட்டார். இவர் திருமதி நாகரத்தினத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சுன்னாகம் டாக்டர் நா. இராசையர், திருமதி சிவஞானம் இராசையா ஆகியோரின் மகனும், சங்கீதா, சென்ஜோன்ஸ் மாணவர்கள் சுரேந்திரா, ரவிந்திரா. கிருஸ் ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற ராஜசிங்கம், ராசபாலன் (ஆஸ்திரேலியா), ராஜகோபாலன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரரு மாவார் அன்னாரது பூதவுடல் ஸ்டேசன் ரோட், சுன்னாகத்திலுள்ள இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக 9-2-85 சனி காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

1728

மரண அறிவித்தல்

மோசேஸ் தானியேல் இம்மானுவேல்

மோசேஸ் தானியேல் இம்மானுவேல் (நோர்லி என்ரபிறைசஸ்) அகாலமரணமானார் இவர் இளைப்பாறிய ஆசிரியர் மோசேஸ் தானியேலினதும் காலஞ்சென்ற ஆசிரியை செ மாலியின் மகனுமாவார். இவரது பூதவுடல் 8-2-85 (இன்று) காலை 9 மணிக்கு நவாலி கிழக்கிலுள்ள அவரது இல்லத்திலிருந்து கொஞ்சேஞ்சி மாதா ஆசனக் கோவிலுக்குக் கொண்டு வரப்படும். அங்கு ஆராதனை திருப்பலியின் பின், ஆசனக் கோவிலின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

மனைவி: நாகேஸ்வரி (பெரிய ஆஸ்பத்திரி)
மக்கள்: யோ (Joe) நிரஞ்சன்,
பீலிக்ஸ் சுதாகரன்
(சம்பத்திரிசியார் கல்லூரி)
சகோதரர்: யேசுதாசன், தம்பிநாயகம்,
ஞானப்பிரகாசம், சேவியர்,
திருமதி அல்பிரட் சின்னத்துரை,
திருமதி விக்றமசிங்க,
திருமதி யேசுரத்தினம்.

1731

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், இலங்கோவில் மேற்கு வீதி 98ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P O. Box 49, Telegram Tele phone number 22389-24126.